# அரியலூர் - தேவனூரில் எஸ்.சிவசுப்பிரமணியன் நினைவு நூலகம்: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!







அரியலூர், மார்ச் 16 -

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், தேவனூர் கிராமத்தில் கிராமப்புற மாணவர்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பினை மேம்படுத்தி அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்கும் உன்னத நோக்கில், அரியலூர் மாவட்டம் - ஆண்டிமடம் - தேவனூர் கிராமத்தில், பெரம்பலூர் மாவட்டக் கழக முன்னாள் செயலாளரும், மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் பெரியார் விருதுபெற்ற எஸ். சிவசுப்பிரமணியன் அவர்களின் நினைவாகக் கட்டமைக்கப்பட்டுள்ள 'எஸ். சிவசுப்பிரமணியன் நினைவு நூலகத்தை', தமிழ்நாடு துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து, கழகக் கொடியினை ஏற்றிச் சிறப்பித்தார்.

இந்நூலகத்தில் கிராமப்புற இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டு, இந்த நூலகத்தில் கணினிப் பயிற்சி மையமும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) உள்ளிட்ட போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையமும் அமைக்கப்பட்டு செயல்படத் தொடங்கவுள்ளன.

இந்நிகழ்ச்சியில் கழகத் துணைப் பொதுச் செயலாளர், மேனாள் ஒன்றிய அமைச்சர் - நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, சிவராஜேஸ்வரி சிவசுப்ரமணியன், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகரன், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்தகுமார், எஸ்.எஸ்.சிவக்குமார், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் ஆர்.கலியபெருமாள், ஆர்.செந்தில்குமார், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் என அனைவரும் பெருந்திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இளைஞர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி, எதிர்காலத் தமிழ்நாட்டை வளப்படுத்தும் நமது திராவிட மாடல் அரசின் இத்தகைய சிறப்பான முன்னெடுப்புகள் என்றென்றும் தொடரும். வெல்வோம் 200 படைப்போம் வரலாறு.



திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, கலைஞர் அறிவாலயத்தில் மத்திய மற்றும் வடக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் அதன் தோழமைக் கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றினார். இந்தக் கூட்டத்தில், தமிழகத்தைப் புறக்கணிக்கும் ஒன்றிய அரசு மற்றும் சமையல் எரிவாயு தட்டுப்பாட்டைக் கண்டித்து முக்கிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்டச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ., துறையூர் சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் குமார், மாவட்ட மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி நிர்வாகி தேவராஜ் உள்ளிட்ட அனைத்து தோழமைக் கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் — இன்று

# தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

### பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் "தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்" இன்று (16-03-2026 - திங்கட்கிழமை) காலை 10.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம் "கலைஞர் அரங்கில்'' நடைபெறும்.**

**அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.**

**பொருள் : 2026 சட்டப்பேரவைத் தேர்தல்**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18,
நாள் : 13.3.2026



திருப்பூர் கிழக்கு மாவட்டம், காங்கேயம் சட்டமன்ற தொகுதி, சென்னிமலை கிழக்கு, மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் இருந்து மாற்றுக் கட்சியை சேர்ந்த 150 க்கும் மேற்பட்டோர் கழக துணைப் பொதுச் செயலாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தனர். இதில் ஒன்றிய கழக செயலாளர்கள் சி.பிரபு (சென்னிமலை கிழக்கு), எஸ்.ஆர்.எஸ்.செல்வம் (சென்னிமலை மேற்கு) உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருவாரூர் மாவட்ட மகளிர் அணி சார்பில், மன்னார்குடி பேராசிரியை ராதிகா மணிமாறன் ஏற்பாட்டில் ராணி சேகர் தலைமையில் நடைபெற்ற இருசக்கர வாகனப் பிரச்சாரப் பயணத்தை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா துவக்கி வைத்தார். இதில் கழகத்தினர் பங்கேற்றனர்.